சார்பு நீதிமன்றம், ஆரணி, திருவண்ணாமலை மாவட்டம்

## Case No. OS.14/2024

2024ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 09ம் நாள் திங்கட்கிழமை

வாதி தரப்பு சாட்சியாகிய **வா.சா.1**-இல் வாக்குமூலம் ஆக்ட் 10/1873-ம் ஆண்டின் ஏற்பாட்டின்படி திருமதி.வெ.லட்சுமி, எழுத்தர் நிலை 2 என்பவரால் பிரமாணம் செய்விக்கப் பட்டு, திறந்தவெளி நீதிமன்றத்தில் நீதிபதியின் முன்னிலையில், நேரடியான கவனத்திலும், கண்காணிப்பிலும் வாய்மொழி சாட்சியம் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ருத்ரய்யன் | தொழில் | தனியார் நிறுவனம் பங்குதாரர் |
| தந்தை பெயர் | சுப்பிரமணி | ஜாதி | |
| கிராமம் | துருவம்ராமசாணிகுப்பம் | சமயம் | |
| தாலுக்கா | ஆரணி | வயது | |

**09.09.2024** முதல் விசாரணை

நான் இவ்வழக்கின் வாதி ஆவேன். பிரதிவாதிக்கெதிராக வழக்கு தாக்கல் செய்துள்ளேன். வழக்கு பற்றிய முழு விவரம் எனக்குத் தெரியும். என் தரப்பு சாட்சியத்தை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விவரங்கள் அனைத்தும் உண்மைதான். என் தரப்பு சான்றாவணங்களாக, 17.04.2002 தேதியிட்ட கூட்டாண்மை பத்திரம் நகல் **வா.சா.ஆ.1**,(அசல்ஆவணத்துடன் சரி பார்க்கப்பட்டு நகல் குறியீடு செய்யப்படுகிறது) 30.04.2002 தேதியிட்ட பதிவு சான்று நகல் **வா.சா.ஆ.2**, (அசல் ஆவணத்துடன் சரி பார்க்கப்பட்டு நகல் குறியீடு செய்யப்படுகிறது) 2021 முதல் 2022 வரையான வாதி நிறுவனத்தின் கணக்குபேரேடு அசல் **வா.சா.ஆ.3**, 17.11.2021 தேதியிட்ட வா.சா.ஆ.3 பேரேட்டில் பக்கம் 74ல் உள்ள பிரதிவாதியின் கையெழுத்து மட்டும் **வா.சா.ஆ.4**, 12.01.2021 தேதியிட்ட வா.சா.ஆ.3 பேரேட்டில் பக்கம் 89ல்உள்ள பிரதிவாதியின் கையெழுத்து மட்டும் **வா.சா.ஆ.5**, 03.04.2023 தேதியிட்ட வழக்கறிஞர் அறிவிப்பு நகல் **வா.சா.ஆ.6**, அஞ்சலக ஒப்புகை அட்டை **வா.சா.ஆ.7**, 20.04.2023 தேதியிட்ட பதில் அறிவிப்பு **வா.சா.ஆ.8** தாக்கல் செய்கிறேன். வழக்கில் கோரியுள்ளவாறு தீர்ப்பு பிறப்பிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.